# THE JEWEL

**FEB 16 to MAR 15, 2024**

*Bulletin of*

# LIONS CLUB OF SIVAKASI

**Vol : 9**



**Editor** : Lion Deepa Lakshmi Sudhakaran
**Address** : 641, Gnanagiri Road, Sivakasi.
**Phone** : 94875 91369
**Email** : editor.lionsclubofsivakasi@gmail.com



**Lion K.Prabakar**
*President*
98949 95884
president@lionsclubofsivakasi.com



**Lion P.Nithiyapandi**
*Secretary*
94431 69876
secretary@lionsclubofsivakasi.com



**Lion P.Sudhakaran**
*Treasurer*
94433 31369
treasurer@lionsclubofsivakasi.com

## Associate Editors 2023 - 24



**Lion**
**MJF P.Vinoth Kanna**



**Lion**
**M.Raddhikadevi**



**Lion**
**S.Bhavani**



**Lion**
**Amirtha Priya**

## Slogan : Deserve, Fight for Right
## Theme : Touch the Heart by Service

# Lions Club of Sivakasi Surpassing 62nd Year 1961 - 2023

| | | |
|---|---|---|
| Multiple District | : | **324** |
| District | : | **324 A** |
| Region | : | **Raja Rajan** |
| Zone | : | **Vilvam** |
| Club No | : | **26504** |
| Inaugurated on | : | **09-05-1961** |
| Charterd on | : | **19-05-1961** |
| Total Members | : | **225** |
| Charter Member | : | **1** |
| MJFs & PMJFs | : | **28 & 3** |
| Meeting Days | : | I, II, IV Wednesday |
| Meeting Venue | : | Sivakasi Lions Junior School Palaniandavarpuram Colony, Sivakasi. |
| Permanent Project | : | **The Sivakasi Lions Mat.School, Sivakasi. Bus Shelters, Children's Park, Blood Separation Unit, Blood Storage D.Freezer, ICU Ward & Washing Plant at Sivakasi G.H., Library and sewing machine centre in Burma Colony.** |

# Table of Contents


★ PST's Report 4

★ Editor Report 10

★ International President Message 11

★ Perfect year Governor 12

★ Fabricio Oliveria 14

★ VIP Fishing Tournment 16

★ Lions Club of Calcutta 17

★ 324-A Dist. News 18

★ Inter Club Meeting with Lions Club of Paghat 19

★ PDG Month Celebration 23

★ Decades of Dedication 27

★ General Body Meeting 33

★ 2024-25 Office Bearers 36

★ Lion Star 37

★ Cover Story 42

★ Unveiling School Activities 48

★ Cherishing the moments of our members 51

# PRESIDENT MESSAGE



அனைவருக்கும் வணக்கங்கள்,

நாங்கள் பதவியேற்று 9 மாதங்கள் முடிந்து விட்டன. “Time flies really quickly”, பல்வேறு சேவை திட்டங்கள் செய்யும் போது மன நிறைவாக இருந்தது.

சமீபத்தில் PID Lion K.தனபாலன் PMJF அவர்கள் நமது சங்கத்திற்கு வருகை தந்த போது அவர்கள் முன்னிலையில் நமது PDG Lion A.வைரப்பிரகாசம் MJF அண்ணாச்சி அவர்கள் குடும்பத்தினரால் ஸ்பான்ஸர் செய்யப்பட்ட Sivakasi G.H. Maternity ward waiting area-வில் 1600 சதுர அடியில் Paver block பதித்து கிரானைட்டினால் ஆன Stone Bench-கள் அமருவதற்காக உருவாக்கப்பட்ட சேவை திட்டத்தை லயன் அய்யன் அதிதீரன் அவர்கள் திறந்து வைத்தார்கள். தினமும் குறைந்த பட்சம் 500 நபர்கள் அந்த waiting area-வை உபயோகப்படுத்துவார்கள், அவர்களது குடும்பத்தினற்கு நமது சங்கத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த வருடம் நாம் 3 சங்கங்களுடன் Inter Club Meeting நடத்தினோம். அதில் Lions Club of Erode Supreme மற்றும் Lions Club of Palghat இரு சங்கங்களும் லயன்ஸ் சங்கக் கூட்டங்கள் நடத்த மிகவும் அருமையான A/C hall அமைத்துள்ளார்கள். 63ம் வருடத்தில் பயணித்துக் கொண்டிருக்கும் நமது சங்கமும் அனைத்து வசதிகளும் உள்ளடங்கிய A/C ஹால் உருவாக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று நான் நினைக்கிறேன். நமது சங்க உறுப்பினர்களின் உறுதுணையோடு இந்தத் திட்டத்தை விரைவில் செயல் படுத்த திட்டமிடுவோம்.

நன்றி வணக்கம்!

**Lion K.Prabakar**
*President*

# செயலாளர் அறிக்கை

*Lion P.Nithiyapandi*



அனைவருக்கும் வணக்கம்,

நமது சங்கத்தின் ஒன்பதாவது மாத இதழ் வழியாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. பிப்ரவரி 16 முதல் மார்ச் 15 வரை நமது சங்கத்தின் செயல்பாடுகளும் சேவைகளும் மிகச்சிறப்பாக நடைபெற்றது. சேவைகளில் பங்கு பெற்று நிதியுதவி அளித்த உறுப்பினர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

28.02.2024 அன்று பிப்ரவரி மாதத்தின் இரண்டாவது பொதுக்குழுக் கூட்டம் PDG மாதக் கொண்டாட்டமாக நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக PID லயன் K.தனபாலன் PMJF (லயன்ஸ் கிளப் ஆப் ஈரோடு சுப்ரீம்) அவர்கள் வருகை புரிந்தார். சிவகாசி அரசு மருத்துவமனையில் மகப்பேறு கட்டிடம் எதிரில், சிகிச்சைக்காக வரும் கர்ப்பிணிப் பெண்கள் அமர்வதற்காக 2000 சதுர அடியில் பேவர் பிளாக் தரை மற்றும் எட்டு கிரானைட் பெஞ்சுகளை நமது சங்கத்தின் மதிப்புமிகு லயன் A.வைரப்பிரகாசம் MJF, மீரா வைரப்பிரகாசம் MJF அவர்களின் குடும்பத்தினர் வழங்கினார்கள். இதை லயன் அய்யன் அதிதீரன் மற்றும் சிறப்பு விருந்தினர் திறந்து வைத்தார்.

மேலும் பொருளாளர் லயன் P.சுதாகரன் அவர்கள் வழங்கிய சிவகாசி மற்றும் திருத்தங்கல் ரெயில்வே கிராஸிங் அருகே சாலை பாதுகாப்பு பலகையையும் திறந்து வைத்தார். நமது சங்கத்தில் 25 ஆண்டுகளுக்கு மேலாகத் தொண்டாற்றி வரும் உறுப்பினர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

06.03.2024 அன்று மார்ச் மாதத்தின் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது.

08.03.2024 அன்று நமது லயன்ஸ் இன்டர்நேஷனல் பள்ளியின் அட்மிஷன் ஆபிஸ் ரூம் திறப்புவிழா நடைபெற்றது.

13.03.2024 அன்று மார்ச் மாதத்தின் முதல் பொதுக்குழுக் கூட்டத்திற்கு திருமதி.J.ஜெயலட்சுமி (Yoga Instructor) அவர்கள் சிறப்பு விருந்தினராக வந்து ஆரோக்கியமான வாழ்க்கை பற்றி சிறப்புரையாற்றினார்.

## சேவைகள்

பசிக்கு உணவு திட்டத்தின் மூலம் தினமும் 10 நபர்களுக்கு மேல் மேகலா பல் மருத்துவமனையில் வைத்து உணவு வழங்கப் பட்டது. இதற்கு MJF லயன் S.வாசியப்பன், MJF லயன் P.வினோத்கண்ணா நிதியுதவி அளித்தார்கள்.







26.02.2024 அன்று நமது முன்னாள் தலைவர் லயன் A.P.செல்வராஜ் MJF அவர்கள் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு இரண்டு foetal monitor, பிரசவ வார்ட்டுக்கு மூன்று இருக்கைகள் கொண்ட stainless steel நாற்காலிகளையும், இரண்டு cassetts for x-ray machine 300 தலையணைகள் மற்றும் 300 போர்வைகள் வழங்கினார்.








28.02.2024 அன்று முருகன் என்ற முதியவருக்கு கண்புரை அறுவை சிகிச்சை செய்ய மருத்துவ உதவித் தொகை வழங்கப்பட்டது.

29-02-2024 அன்று சுற்றுப்புற சூழல் தினத்தை முன்னிட்டு மரக் கன்றுகள் நடப்பட்டது.





29.02.2024 அன்று நாரணாபுரம் பஞ்சாயத்து பள்ளிக்கு தேவையான நூல்கள் வழங்கப்பட்டது.

02.03.2024 அன்று ஜீவக்கல் குழந்தைகள் காப்பகத்திற்கு மதிய உணவும், ஒரு மாதத்திற்குத் தேவையான பலசரக்கு பொருட்களும் வழங்கப் பட்டது.






04.03.2024 அன்று போலியோ தடுப்பு முகாமில் கலந்து கொண்ட சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

05.03.2024 சிபியோ உண்டு உறைவிடப் பள்ளிக்கு ஒரு மாதத்திற்கு தேவையான பலசரக்கு பொருட்கள் வழங்கப்பட்டது.







06.03.2024 அன்று வள்ளலார் இல்லத்திற்குத் ஒரு மாதத்திற்குத் தேவையான பலசரக்குப் பொருட்கள் வழங்கப்பட்டது.

12.03.2024 அன்று சிவகாசி காளீஸ்வரி கல்லூரியில் வைத்து Blood donation camp நடைபெற்றது.



# பொருளாளர் அறிக்கை

*Lion P.Sudhakaran*



அனைவருக்கும் வணக்கம்,

இந்த அரிமா ஆண்டு முடிகின்ற தருவாயில் நாம் உள்ளோம். இதுவரை சந்தா தொகையை செலுத்திய உறுப்பினர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நமது மாவட்டத்தில் இருந்து இரண்டாவது அரையாண்டு சந்தா பில் வந்துள்ளது. அதில் நாம் செலுத்திய முதல் அரையாண்டின் தொகைக்கு GST வரியைச் சேர்த்துக் கட்டும்படியும் மற்றும் நடப்பு அரையாண்டின் சந்தாவிற்கும் சேர்த்து GST வரி செலுத்தும்படி invoice வந்துள்ளது. அத்தொகையை Board meeting கூடத்தில் தெரியப்படுத்தி கட்டிவிட்டோம்.

**Scan QR Code for**

**Club Website**

Website :
**www.lionsclubofsivakasi.com**

Face Book ID :
**Lions Club of Sivakasi**




வளர் இளம் பருவத்திற்கான சிறப்பு மருத்துவ முகாம் ஐந்து மேல் நிலைப்பள்ளிகளில் நடைபெற்றது.



*Touch the Heart by Service*

# இதழாசிரியர் பக்கம்

*Lion Deepa Lakshmi Sudhakaran*



அனைவருக்கும் இனிய வணக்கங்கள்,

ஒன்பதாவது மாத இதழ் வழியாக உங்களை. சந்திப்பதில் மகிழ்ச்சி, PID லயன் K.தனபாலன் PMJF அவர்களின் முன்னிலையில், நமது சங்கத்தில் 25 ஆண்டுகளுக்கு மேலாக உறுப்பினர்களாக இருந்தவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள், இவர்களின் உறுதியான அர்ப்பணிப்பு, நிலையான ஆர்வம், மற்றும் சிறந்த தலைமைத்துவம் நமது சங்கத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகித்து அனைத்து உறுப்பினர்களுக்கும் உத்வேகம் அளிக்கின்றது. நமது சங்கத்தின் ஒரு முக்கிய மைல்கல்லான லயன்ஸ் இன்டர்நேஷனல் பள்ளியைப் பற்றி பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

கோடை காலத்தின் அரவணைப்பை நாம் தழுவிக் கொண்டிருக்கும் வேளையில் நமது ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கு முன்னுரிமை அளிப்பது அவசியம். நாம் தொண்டுணர்வு கொண்ட லயன்ஸ் இயக்க உறுப்பினர்கள் அல்லவா...

**வெயிலோடு விளையாடி வெயிலோடு உறவாடி**

**வெயிலோடு மல்லுக்கட்டி தொண்டு செய்வோமே...**

வெயிலின் தாக்கம் அதிகரித்தாலும், நமது அன்றாட வேலைகளுக்காக கோவில், கடை, வங்கி மற்றும் பல இடங்களுக்குச் செல்ல நேரிடும். இந்த வெயிலில் தாகம் தணியாது எனவே நாம் செல்லும் போது சிறிய பாட்டில்களில் தண்ணீர், மோர், எலுமிச்சை ஜுஸ் எடுத்துச் சென்று தேவைப்படும் முதியவர்கள், குழந்தைகளுக்கு கொடுக்கலாம். வீட்டிற்கு வரும் தபால்காரர், டெலிவரி பையன், வேலையாட்களுக்கும், பறவைகள், விலங்குகளுக்கும் கொடுக்கலாம். இந்த எளிய கருணைச்செயல் தேவைப்படுவோர்க்கு மிகப்பெரிய உதவியாக இருக்கும்.

# INTERNATIONAL PRESIDENT MESSAGE



Dear Lions,

We have good news, on behalf of your entire MISSION 1.5 steering committee, it's my pleasure to inform you that we are seeing success already, and this is because you are working to make our clubs, our communities, and our service stronger than ever. Thanks to your tremendous efforts. I'm excited to report that our mid year membership total for our first year of MISSION 1.5 are some of the best we've seen in the last 20 years. This means played our impact is growing.


Take a pride in the crucial role you've played in MISSION 1.5's first big measurable success. Keep finding opportunities to welcome new clubs & new members. Imagine where our Membership could be in 2027. we simply need to sustain our commitment to MISSION 1.5. If we Continue to challange ourselves and push the pace of membership growth imagine how many more lives we can touch through our service.

Now MISSION 1.5 has launched, let's Keep it soaring, we need every Lion on board to achieve our ambitious goal. Lets keep going until MISSION 1.5 is officially accomplished.

Yours in service

*Dr. Patti Hill*

# PERFECT YEAR GOVERNOR - 324-A
# லயன் Dr.D.பிரான்ஸிஸ் ரவி MJF



இயற்கை எழில் கொஞ்சும் கன்னியாகுமரி அருகில் ஜேம்ஸ் டவுண் என்னும் ஊரில் 1963-ம் ஆண்டு நமது ஆளுநர் லயன் Dr.D.பிரான்ஸிஸ் ரவி MJF பிறந்தார்.

1990 ஆண்டு பிரமிளாமேரி அவர்களை இல்லறத் துணைவியாக ஏற்றுக் கொண்டார். இல்லறத்தின் பயனாக அன்பு மகன் Er. F.P. தேவ் பிரவிஷ் B.E., MBA., ஆசை மகள் Er. F.P. ப்ரினிஷர் MDS.

தீப்பெட்டி, பிரிண்டிங், செங்கல், Electric Cargo vehicle, பானிச்சர் விற்பனைக் கூடம் என்று பல தொழில்களை சிறப்பாக செய்பவர். இவரது உழைப்பை பாராட்டி அமெரிக்க பல்கலைக்கழகம் தொழில் ரீதியான சேவைக்காக கௌரவ டாக்டர் பட்டத்தை வழங்கியது. INDO-BRAZIL கூட்டாக 2023ம் ஆண்டில் பிப்ரவரி மாதம் மனிதாபிமானி விருது வழங்கியது.

பொழுதெல்லாம் சேவை செய்ய லயன்ஸ் இயக்கத்தில் 2016-ம் ஆண்டு இணைந்து, சங்கம் மற்றும் மாவட்டத்தில் வழங்கிய அத்தனை பதவிகளையும் பெருமையடையச் செய்து பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

July 11, 2023-ல் அமெரிக்காவில் பாஸ்டன் நகரில் பதவியேற்று தூத்துக்குடி வந்தவுடன், தன் Signature project-ஆன மாற்றுத்திறனாளிகளுக்கு வீல்சேர் வழங்கினார். 50 நபர்களுக்கு முதியோர் இல்லத்தில் உணவு வழங்கி சேவைத் திட்டத்தை தொடங்கினார்.

குற்றாலத்தில் லயன்ஸ்-க்கு சொந்தக் கட்டிடம் கட்ட அடிக்கல் நாட்டினார். 2036 பதிவுகள் பெற்று மிகச்சிறப்பாக அமைச்சரவை பதவியேற்பு விழா நடத்தியவர். RC, ZC schooling

மலேசியாவிலும், திருநெல்வேலியிலும் நடத்தினார். மூணாறில் PST schooling-ல் 630 பதிவுகள் பெற்று முத்திரைப் பதித்தார்.

மாற்றம் வேண்டும் என்றால் நம்மை மாற்றித்தான் ஆக வேண்டும் என்ற சிந்தனையை வலியுறுத்தி வருபவர் என்னில் நீங்கள் உங்களில் நான் என சாதுரியமாகப் பழகும் ஆற்றல் பெற்றவர். சேவையால் இதயம் தொடுவோம் என்று நமது ஆளுநர் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றார்.






# *FABRICIO OLIVERIA*

## *(First Vice President)*



Fabricio Oliveria of catole do Rocha, Paraiba, Brazil was elected to serve as first, vice president of Lions Club International 's $105^{th}$ International Convention.

Fabricio oliveria is a businessman, a member of the Catole do Rocha Lions club since 1985, he held many offices Within the association, Additionally he has served as district LCIF chair person, Sight First Committee chair, leadership development chair person, multiple district DGE Seminar Coordinator and chair of the district Lions Foundation, also served twice as District Governor's - Elect seminar group leader.

In recognition of his service, he has received numerous awards, Including the 100% the Club President Award, Extension award for organizing nine new Lions clubs, 19 International President's Certificates of appreciation, the Paradigm award, 14 International President's award, Ambassador of Good will award, the highest honor of the association to its members, key award for helping induct 30 new lions members, Extension certificate for sponsoring five new Leo clubs, Global Mission and Medal for his Sight first efforts. He is also a Progressive Melvin Jones Fellow.


His wife Amariles also a Lion member and Melvin Jones Fellow, they have three children & a grand daughter

**First Vice District Governor Training :** The remarkable achievements of International First Vice President Fabricio Oliveira and our dedicated leaders at the recent First Vice District Governor Training. During this Inspiring event, LCIF witnessed a tremendous out pouring of generosity, with slightly support our mission. more than US$1 million raised to support our mission.



**Peace Poster Contest (Grand Prize winner)**

Congratulation to 2023-24 Lions International Peace Poster Contest Grand Prize Winner FANJIN SI, II, sponsored by Shaanxi Datang Lions Club China.





# *VIP Fishing Tournamant*

**(Bringing the joy of fishing to the Visually Impared persons)**

For 40 years The North Carolina Lions VIP (Visually Impared Persons) Fishing Tournament is the largest gathering of Visually Impared in North Carolina held in each October. This tournament has grown from serving 12 people in its first year to now serving more than 350 participants.

The project brings participants from across North Carolina for three days of recreation, fellowship, independent living workshop and rehabilitation programs for VIPs. They are provided opportunities to eliminate negative attitudes often associated with blindness. The tournament is hosted by the First Flight, Manteo, Nags Head, Wenchese, Lower Currituck and the Columbia Lions Clubs. There will be 350 VIPs, 130 sighted guests & 300 volunteers. In addition  to fishing they Visit tourist attractions, see Vendors, interact with an opthalmologist, and hear from  state officials, enjoy a Bible study & dance.






# *Lions Club of Calcutta*

Lions Club of Calcutta was inagurated on 1st Feb 1957 and charted on 13th March 1957. It is the first Lions Club, which has been formed in the entire Eastern region. The club has 345 members and sponsored 27 clubs, and has its independent secretariat with all modern facilities for a better centralised administration.

Their 3 permanent projects are Calcutta Lions Bimal Poddar Eye Hospital (1961), Calcutta Lions Ramkrishnabati Hospital (1973), Calcutta Lions Netra Nikatan (1992). All the hospitals are equipped with latest Hi-tech equipments. Calcutta Lions Netra Niketan has been declared as the best eye hospital of MD 322.

Because to of their overwhelming support to campaign sight first programme, Lions Clubs International has accredited “MODEL CLUB” to their club in the year 2005-06, under this campaign they contributed nearly 30 lakhs to the LCIF.



# 324-A மாவட்டச் செய்திகள்

25.02.2024 அன்று பாளையங்கோட்டையில் வைத்து கட்டபொம்மன் மண்டல மாநாடு இதயம் மஹாலில் வைத்து நடைபெற்றது.




34th District Convention : நமது ஆளுநர் லயன் Dr.D.பிரான்ஸிஸ் ரவி MJF அவர்களின் 34வது District Convention ஏப்ரல் 20, 21 சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்கள் கன்னியாகுரியில் உள்ள விஸ்வா கிராண்ட் ஹோட்டலில் வைத்து சிறப்பாக நடைபெற உள்ளது





அமெரிக்கா, சிக்காகோ மாநகரில் 2024-25 ஆண்டிற்கான ஆளுநர் பயிற்சி பட்டறையில் நமது முதலாம் துணை ஆளுநர் லயன் Dr.P.அய்யாதுரை PMJF அவர்கள் கலந்து கொண்டார்.

# Inter State, Inter District, Inter Club Meeting Between Lions Club of Sivakasi & Lions Club of Plalghat

***Lion M.Ramamoorthy,*** Past President



Our club had the privilege of Engaging in an enriching Inter State Inter club Meeting with Lions Club of Palghat in District 318-D on Feb, 17th 2024. We 14 members from our club participated in this meeting. President Lion CA. Vimal Venu PMJF, Secretary Lion Er.Girikumar. P.Treasurer Lion Adv. C.Madhavan kutty extended a warm and generous hospitality to us.

Lions Club of Palghat was inagurated on 9th April 1960 and charted on May 12th 1960 with 31 charter members. At present there are 91 members. Two of their Charter members Ln Dr.A.K.Haridas and Lion Prof. N.S.Panchanathar attained the high position as District Governor, later in 2007-08 In Er.K.M.Rahamadulla MJF become the Governor and Continuing as an active member. They are running a CBSE school which has nearly 2300 students and they are doing regular monthly eye camps since 2004 till date. They do celebrate Ladiesnight Celebrations, Onam every year with Cultural programs. Their Club Bulletin “Pallion" used to be published twice every year from 1972.

In the GIVE CONCLAVE, Lions club of Palghat received GOLDEN AWARD for running their PALGHAT LIONS SCHOOL since 1961.

Shri V.V.Giri, Former President of India was an Honorary member of this Palghat Lion club from 1962 to 1972. Club was running a Free Sewing Class to the girls from Palakkad & suburbs to impact training in Tailoring embroidery from 1980-81 till 2004. Lion ladies club used to over see this project. Their New Rs.6 Crore Project of PALGHAT LION'S COLLEGE OF TEACHER EDUCATION BUILDING is setting ready.

It is a 64 year old club, like our club they follow the culture and traditions, in an excellent way. They have separate well furnished office room, board room, meeting hall with seating capacity of 600 members. All rooms are furnished with a/c video, audio facilities and there is a separate dining room.

We had a Business session, Board meeting and General body meeting where both the clubs had the opportunity to interact about their successful projects and exchanged insights about the new and ongoing projects. We also had a wonderful opportunity to develop friendship with them that can last for lifetime.

They honoured myself and our president Lion K.Prabakar for our 25 years of service in Lions, they also honored our PP Lion D.Prabakaran PMJF, PPLion P.Vinoth Kanna MJF for their extraordinary services of more than 5 Crore during their presidentship. They also honored our PSTs, ZC and all our members with mementos and we too honored all their office bearers with mementos, exchanged shields for remembrance, and gifted all the members with a kit bag. Our members who, sponsored things in kit bag are Lion A.P.Selvarajan MJF, Lion

S.Sriram Ashok MJF, Lion.K.Sankar, Lion Tamilarasi Gurumohan, Lion.D.Prabhakaran PMJF, Lion P.Vinothkanna MJF, Lion J.Vignesh, Lion Magesan.

Palghat club's Lady lion members and their Cubs gave Wonderful entertaining programs. Mutually both the clubs enjoyed the occassion and took lot of learnings. The delicious dinner served by them added a memorable and special touch to our visit. Travel and food was comfortable and tasty. A heartfelt thanks to the PSTs and the tour committee chair person Lion P.Vinoth Kanna MJF and Lion D.Prabakaran PMJF for their meticulous planning and arrangements that made this meeting a resounding success.



CBSE School



College of Teacher's Education


























*Touch the Heart by Service*

# பொதுக் குழுக்கூட்டம் (பிப்ரவரி)

## (PDG Month celebration)

**லயன் சங்கரி பாலா கனகசபேசன்**



நமது முன்னாள் மாவட்ட ஆளுநர்களின் சேவைகளையும், தலைமைத்துவத்தையும் கௌரவிக்கும் வகையில் பிப்ரவரி மாதத்தின் இரண்டாவது பொதுக்குழுக் கூட்டம் 28.02.2024 அன்று நடைபெற்றது. இவ்விழாவினைச் சிறப்பிக்க லயன்ஸ் கிளப் ஆப் ஈரோடு சுப்ரீம் சங்கத்தின் PID லயன் K.தனபாலன் PMJF அவர்கள் முதன்மை விருந்தினராக வருகை புரிந்தார்.

நமது லயன்ஸ் பள்ளியைப் பார்வையிட்ட பின் சிவகாசி அரசு மருத்துவமனையில் மகப்பேறு கட்டிடம் எதிரில் பரிசோதனைக்காக வரும். கர்ப்பிணிப் பெண்கள் அமர்வதற்காக பேவர் பிளாக் தரை மற்றும் 8 கிரானைட் பெஞ்சை திறந்து வைத்தார். இதை வழங்கியவர்கள் PDG லயன் A.வைரப்பிரகாசம் MJF மற்றும் மீரா வைரப்பிரகாசம் MJF மற்றும் அவர்கள் குடும்பத்தினர். சிவகாசி மற்றும் திருத்தங்கல் ரெயில்வே கிராசிங் அருகில் சாலை பாதுகாப்பு பலகையையும் திறந்து வைத்தார். இதை வழங்கியவர்கள் லயன் D.சுதாகரன் மற்றும் லயன் தீபா சுதாகரன்.

மாலை 7.00 மணியளவில் லயன் ரேணுகா தேவி முத்துக்குமரன் நடத்திய விளையாட்டுடன் கூட்டம் ஆரம்பமானது. லயன் N.கனகசபேசன் சிறப்பு விருந்தினரை மேடைக்கு அழைத்து வந்தார். கொடி வணக்கத்தை லயன் கோதை செந்தில் வேலவனும் லயன்ஸ் வழிப்பாட்டை லயன் சித்ரா குணசேகரனும் வாசித்தார்கள். உலக அமைதிக்காக ஒரு நிமிடம் மௌனம் கடைபிடிக்கப்பட்டது. தலைவர் லயன் K.பிரபாகர் வரவேற்புரை வழங்கினார் லயன் P.நித்திய பாண்டி செயலாளர் அறிக்கையை வாசித்தார்.

50 ஆண்டுகளுக்கு மேலாக நமது சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கும். நமது பட்டயப் பொருளாளர் PDG லயன் A.வைரப்பிரகாசம் MJF, லயன் S.சந்திரசேகரன், லயன் K.S.S.P. தனசேகரன் MJF, லயன் C.சுபாசிங் இந்தியராஜன், லயன் K.A.P.A.ராஜசேகரன் லயன் A.பிரகஸ்பதி அவர்களும், 25 ஆண்டுகளுக்கு மேலாக உறுப்பினர்களாக இருக்கும் 80 உறுப்பினர்களும் கௌரவிக்கப்பட்டார்கள். சமூகத்திற்கு சேவை செய்வதில் இவர்களின் அர்ப்பணிப்பு மிகவும் பாராட்டிற்குரியது.

சிறப்பு விருந்தினரை லயன் M.ராமமூர்த்தி அவர்கள் எளிமையாக அறிமுகம் செய்து வைத்தார். 1992-ல் லயன்ஸ் கிளப் ஆப் ஈரோடு சுப்ரீமில் சேர்ந்தார். 2001-02 ஆம் ஆண்டு ஆளுநராகப் பதவி வகித்தார். 2008 ஆம் ஆண்டு பன்னாட்டு இயக்குநராக இருந்தார், இரண்டு முறை லயன் இண்டியா இதழில் ஆசிரியராக இருந்துள்ளார். தலைமைத்துவம் பயிற்சித் திட்டத்தை தமிழில் நடத்திட அதிகாரப்பூர்வ அனுமதி பெற்றுத் தந்தார். Grand Master Key, 2 Leadership Awards, 3 International President's Award என்று பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

**PID லயன் K. தனபாலன் PMJF அவர்களின் உரை :** 68 ஆண்டுகள் கடந்தும் கூட இன்னும் மிகப்பெரிய சேவைகள் ஆற்ற அளப்பரிய ஆர்வம் கொண்டுள்ள அரிமாக்கள் இருக்கும் சங்கத்தில் கலந்து கொள்ள மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன். செல்வம், பதவி, அதிகாரம், கல்வி அறிவு, அன்பு, கருணை, ஞானம் இவற்றையும் தாண்டி சாதி, மதம், இனம், மொழி எல்லாவற்றையும் களைந்து விட்டு மனிதனை மனிதனாகப் பார்க்கும் பார்வை தான் உலகத்தில் பெரிதினும் பெரிது. இதைத் தான் 105 ஆண்டுகளுக்கு முன்பு மெல்வின் ஜோன்ஸ் ஏற்படுத்தினார். இது தான் மானுட வாழ்வின் மிகப்பெரிய தத்துவம்.

PDG லயன் A.வைரப்பிரகாசம் MJF அவர்கள் ஒரு ஆண் சிங்கம், இன்றும் சங்கத்தை தன் கண்காணிப்பில் வைத்து, ஒரு சங்கம் எப்படி சேவை நிகழ்த்த வேண்டும், எப்படி செயல்பட வேண்டும் என்று தொடர்ந்து வழிக்காட்டியாக இருக்கின்றார். அவர் தான் உங்கள் சங்கத்தின் ஆதாரச்சுருதியாக திகழ்கின்றார் அவருக்கும் அவருடைய துணைவியார் லயன்

மீராவைரப்பிரகாசம் MJF அவர்களுக்கும் நெஞ்சார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முன்னாள் ஆளுநர்களின் பணி மிகவும் இன்றியமையாதது. குடையைப் பார்த்து ஒருவன் கேட்டான் உனக்கு மழையில் நனைவது பிடிக்குமா இல்லை வெயிலில் காய்வது பிடிக்குமா என்று அதற்கு அந்த குடைகூறியது மழையில் நனைவதோ இல்லை வெயிலில் காய்வதோ எனக்கு முக்கியமில்லை. என்னை நம்பி ஒருவன் கீழே இருக்கின்றான் அவனுடைய நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டும் என்பதே எனக்கு முக்கியம். இந்த குடையைப் போன்று தான் நமது முன்னாள் ஆளுநர்கள் எல்லாம் இருக்கன்றார்கள். அதனால் தான் நமது லயன்ஸ் இயக்கம் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து முன்னாள் ஆளுநர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நமது சங்கத்தின் எட்டாவது மாத இதழ் சிறப்பு விருந்தினரால் வெளியிடப்பட்டது. பிறந்த நாள் மற்றும் திருமண நாள் கொண்டாடும் உறுப்பினர்களுக்கு லயன் தீபா அருண்குமார் வாழ்த்துக்கள் கூற அவர்கள் கேக் வெட்டி கொண்டாடினார்கள். Tail twister விளையாட்டில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. Early Bird award-ஐ லயன் K.அம்புலிராஜன் வழங்கினார்கள் பொருளாளரின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவுபெற்றது.







LIONS CLUB OF SIVAKASI

LIONS CLUB






CLUB OF SIVAKASI

LIONS CLUB OF SIVAKASI
LIONS CLUB


# DECADES OF DEDICATION

(Honoring our esteemed members)

We recognize and celebrate our esteemed members who have been with us for more than 25 years. Their unwavering commitment, dedication and leadership have been invaluable to our Club's mission. Together we Continue to make a positive impact and uphold the valves of Lionism.

## 50 YEARS AND ABOVE IN OUR CLUB SERVICE

- ★ Joined on 01.05.1961 (charter member)
- ★ Treasurer in 1960-61, 1961-62
- ★ Secretary in 1962 - 63
- ★ President in 1970 - 71
- ★ Zone Chairman in 1976 -77
- ★ Deputy District Governor in 1978-79
- ★ District chairman in 1982 - 83
- ★ Governor in 1983 - 84
- ★ Slogan "Unite and Serve"



**PDG**
**Lion.A.Vairaprakasam MJF**

As District Governor, he was the first to distribute the District Directory at free of cost to all the Lions during his Cabinet installation. He received the International President's Flyer Award. He is the first MJF (1982) First MJF Couple (1994), first Lion life Member (1994) in our District.

# 50 YEARS AND ABOVE IN OUR CLUB SERVICE



Lion S.Chandrasekaran (85)
Joined on 01-10-1965
Treasurer 1966-67, 1974-75
President 1977-78



Lion K.S.S.P.Dhanasekaran MJF (82)
Joined on 01-10-1965
President in 1975-76



Lion S.Subasingh Indiarajan (79)
Joined on 01.11.1968
Secretary 1979 - 80
President 1982 - 83



Lion K.A.P.A.Rajasekaran (88)
Joined on 01-11-1969
Treasurer 1975 - 76
President 1990 - 91



Lion A. Prahaspathy (79)
Joined on 01-10-1970

# 25 YEARS AND ABOVE IN OUR CLUB SERVICES


Lion M.Ramamoorthy
JL 09-10-1975


Lion C.Kanagasabai MJF
JL 01-10-1976


Lion S.Vijayakumar
JL 01-10-1976


Lion A.M.S.G.Ramamoorthy MJF
JL 01-03-1977


Lion T.D. Rajendran
JL 01-03-1977


Lion S. Stalin
JL 01-10-1977


Lion D.C.B. Ashokumaar
JL 01-10-1978


Lion S. Shenbagamoorthy
JL 01-10-1978


Lion K.Ambulirajan
JL 01-10-1979


Lion A.N.Ramasamy
JL 01-10-1979


Lion A.P.Selvarajan MJF
JL 01-10-1979


Lion N.Kanagasabesan
JL 01-10-1980


Lion K.Paramanandham
JL 01-03-1980


Lion A.M.Gunasekar
JL 01-03-1980


Lion Vijayan PSCD
JL 01-03-1980


Lion A.M.S.G.Ashokan PMJF
JL 01-10-1980


Lion R.Chandra Prakash
JL 01-10-1980


Lion G.Parthasarathy
JL 01-10-1980


Lion A.Tenzing
JL 01-10-1980


Lion R.Ashok Kumar MJF
JL 01-10-1981

# 25 YEARS AND ABOVE IN OUR CLUB SERVICES



Lion P.C. Balakrishnan
JL 01-10-1981



Lion Prem Krishnan Sarda
JL 01-10-1981



Lion A.P.Arunachalam
JL 01-10-1982



Lion S.Sriram Ashok MJF
JL 01-10-1983



Lion P.Sivasubramaniyan
JL 01-10-1984



Lion S.Kumaravelkani
JL 01-01-1985



Lion S.Krishnamoorthy MJF
JL 01-10-1985



Lion K.A.Murugaian
JL 01-10-1985



Lion S. Sermathurai
JL 01-10-1986



Lion M. Rajagopal
JL 01-01-1987



Lion J. Rameshkumar
JL 01-10-1988



Lion Meera Vairaprakasam MJF
JL 01-10-1988



Lion S.R.Sridhar
JL 01-02-1990



Lion K.A.R.Radhakrishnan
JL 01-10-1990



Lion R.Anantharajan
JL 23-10-1991



Lion Hemalatha Anantharajan
JL 23-10-1991



Lion K.Prabakar
JL 27-05-1992



Lion Dr.A.Jeyapaul
JL 27-05-1992



Lion A.Ravi
JL 27-05-1992



Lion Amarjothi Rajasekaran
JL 23-12-1992

# 25 YEARS AND ABOVE IN OUR CLUB SERVICES



Lion Aruna Ashok
JL 23-12-1992



Lion Chitralekha Kanagasabai
JL 23-12-1992



Lion Hemasubha Singh
JL 23-12-1992



Lion Lakshmi Chandrasekaran
JL 23-12-1992



Lion Murugeswari Ravi
JL 23-12-1992



Lion Nalini Ashok Kumar MJF
JL 23-12-1992



Lion Nalini Ashokan PMJF
JL 23-12-1992



Lion Premalatha Ramamoorthy
JL 23-12-1992



Lion Savithridevi Gurusamy
JL 23-12-1992



Lion Tamilarasi Gurumohan
JL 23-12-1992



Lion Thiruselvi Tenzing
JL 23-12-1992



Lion Vathsala Dhanasekaran
JL 23-12-1992



Lion Thirumagal Ashokumar
JL 23-12-1992



Lion A.Asaithambi
JL 01-10-1993



Lion K.Shankar
JL 01-10-1993



Lion S.Ramar MJF
JL 01-10-1993



Lion M.Anantharajan
JL 01-10-1993



Lion Chitra Gunasekaran
JL 01-10-1993



Lion C.Rajagraham
JL 01-10-1993



Lion D.A.Sudharshanan
JL 01-10-1993

# 25 YEARS AND ABOVE IN OUR CLUB SERVICES


Lion M.S.Noormohammad
JL 26-10-1994


Lion Hemalatha Sankar
JL 08-03-1995


Lion Mathanasundari Balakrishnan
JL 08-03-1995


Lion K. Kanakarajan
JL 11-10-1995


Lion S.Radhakrishnan
JL 11-10-1995


Lion S.Vithyatharan
JL 23-10-1996


Lion G.Subburaj
JL 27-11-1996


Lion A.Kumaravel MJF
JL 22-10-1997


Lion EAETS Shenbagarajan MJF
JL 22-10-1997


Lion Hemalatha Jeyapaul
JL 22-10-1997


Lion Kohila Vijayakumar
JL 22-10-1997


Lion Meenakshi Vithyatharan
JL 22-10-1997


Lion Sridevi Shenbagarajan MJF
JL 22-10-1997


Lion Alli Ramar
JL 22-10-1997


Lion Ashadevi Sriram Ashok
JL 28-10-1998


Lion A.K.K.Baskaran
JL 28-10-1998


Lion A.A.Magesan
JL 28-10-1998


Lion Mala Stalin
JL 28-10-1998


Lion Visalakshi Baskaran
JL 28-10-1998


Lion Murugambal Rajagopal
JL 01-04-1999

# பொதுக்குழுக் கூட்டம் (மார்ச்)

லயன் **பத்மினி பிரிஜ்ராஜ்**



மார்ச் மாதப் பொதுக்குழுக் கூட்டத்தில் திருமதி.J.விஜயலட்சுமியின் "ஆரோக்கியமான வாழ்க்கை" பற்றியக் கருத்து மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

பெண்கள் தினத்தை முன்னிட்டு லயன் ரேணுகாதேவி முத்துக்குமரன் விளையாட்டை நடத்தினார். கொடி வணக்கத்தை லயன் தீபா சுதாகரனும், லயன்ஸ் வழிப்பாட்டை லயன் T.S.விவேகானந்தன் அவர்களும் வாசித்தார்கள். உலக அமைதிக்காக ஒரு நிமிடம் மௌனம் கடைபிடிக்கப்பட்டது. தலைவர் அனைவரையும் வரவேற்றார். செயலாளர் பிப்ரவரி மாதத்தில் நடைபெற்ற சேவைகளையும், செயல்பாட்டையும் பற்றிக் கூறினார்.

சிறப்பு விருந்தினரை லயன் அமிர்தபிரியா முரளிராஜ் அறிமுகம் செய்து வைத்தார். திருமதி.J.விஜயலட்சுமி PDGY ஒரு தலைசிறந்த யோகா பயிற்சியாளர். தன்னுடைய 50வது வயதில் அண்ணாமலை யுனிவர்சிட்டியில் (சிதம்பரம்) PDGY பட்டம் பெற்றார். பல பள்ளிகளில் யோகா பயிற்சியாளராகப் பணியாற்றினார். மேலும் எட்டு புத்தகங்களை எழுதியுள்ளார்.

## திருமதி.J.விஜயலட்சுமியின் உரை

தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானும் கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்த பின்
தன்னையே அருச்சிக்கத் தான் இருந்தானே.....

தன்னை முழுவதுமாக உணர்ந்தவர்களுக்கு ஒரு துன்பமும் இல்லை. விலைமதிப்பற்ற சொத்து நமது உடல், ஓர் அற்புதமான இயந்திரம், நமது மனம்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும். நமது காது சிறுநீரக வடிவம், மூக்கு நுரையீரல் வடிவம் உதடு மண்ணீரல் வடிவம், கண் கல்லீரல் வடிவம், நாக்கு இருதய வடிவில் உள்ளது. இந்த

ஐந்து ராஜகோலங்களும் நமது உடம்பிற்குள் செயல்படுவதை உணர்ந்தால் நோய் நம்மை அண்டாது.

மனிதன் தன் உடலால், மனதால், கைகளால் செய்ய முடியாத காரியங்கள் அத்தனையும் செய்யும் கை இயற்கை. இயற்கையை இரசித்து வழிபட்டு, இயற்கையோடு இணைந்து அனுபவிப்பதே அறிவு. பஞ்சபூதங்களால் ஆன உடலுக்கு பஞ்ச பூதங்களும் உணவாக வேண்டும்.

**மண்ணில்** இருந்து விளையும் காய், கனி, தானியங்கள் அதுவும் சமைக்கப்பட்டால் உயிர்சக்தி அழிக்கப்பட்ட மண்தான். மண்ணை மட்டும் சாப்பிட்டால் போதுமா..?

**விண்ணையும்** சாப்பிட வேண்டும். அது தான் உபவாசம். தினமும் இரவு எட்டு மணிக்கு உணவருந்தினால் காலை எட்டு மணி வரை வயிற்றுக்கு ஓய்வு கொடுத்து உபவாசம் கடைப்பிடிக்க வேண்டும். அப்போது பழுதுபட்ட பாகம் புதுப்பிக்கப்படும்.

**காற்றை** உணவாக்கும் போது உடல் நன்றாக இயங்க முடியும். அசுத்தமான கார்பன்டை ஆக்ஸைடு கபாலபதி மூலம் வெளியேற்றப்பட வேண்டும்.

**நெருப்பாக** நம் உடல் உஷ்ணம் குளிர்ச்சி சமநிலைப்பட்டு சரியாக பராமரிக்கப்பட வேண்டும். சூரிய நமஸ்காரம் செய்யும் போது உடலில் உள்ள சக்தி சமநிலை அடையும்.

**நீரால்** நமது உடல் தூய்மை அடையும், வயிற்றில் உள்ள கழிவுகள் சரியாக வெளியேறும்.

ஆரோக்கியம் என்பது உடலுக்கு மட்டும் உரிய ஒன்றல்ல, அது அனைத்திலும் உயிராக ஊடுருவி நிற்பது. ஆரோக்கியமான உடல், மனம், புத்தி, அறிவு, சமுதாயம், உறவுகள், பொருளாதாரம் கலை என எல்லாவற்றிலும் இருக்கிறது. உடலுக்கு தன்னைக் காத்துக் கொள்ளும் சக்தி உண்டு. எங்கும் நிறைந்துள்ள இயற்கையின் சக்தியே மானிட தேகத்தில் இருப்பதை உணர வேண்டும்.

வாழ்க நலமுடன் ! வாழ்க வளமுடன் !!

Greater Committee Chairperson தீபா அருண்குமார் இந்த

மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் கொண்டாடும் உறுப்பினர்களுக்கு வாழ்த்துக்கள் கூற அவர்கள் கேக் வெட்டி கொண்டாடினார்கள். Tail twister விளையாட்டில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டது. Early bird award-ஐ Lion S.விஜயக்குமாரும் லயன் அருண்குமாரி விஜயகுமாரும் கொடுத்தார்கள்.

பொருளாளரின் நன்றியுரையைத் தொடர்ந்து தேசிய கீதத்துடன் கூட்டம் நிறைவுப் பெற்றது.









# CONGRATULATIONS TO OUR NEW OFFICE BEARERS FOR 2024-25

We are happy to announce the new office bearers who will lead our club for the year 2024-25. These dedicated individuals have been elected to serve in key roles, guiding our club towards continued growth and success.



Lion T.S.Vivekananthan
President (E)

*"As we embark on this new journey together, I am filled with optimism and enthusiasm for the opportunities that lie ahead. Together, we have the power to make a meaningful difference in our community, to inspire positive change, and to uphold the values of Lionism."*



Lion V.K.Senthil Kumar
Secretary (E)



Lion S.Vijaykumar
Treasurer (E)

We congratulate each of them on their new roles and responsibilities, and we look forward to their leadership in the coming year. Let us give them our full support as they work tirelessly to advance the mission and vision of our club.

# LION STAR






## *Lion D.Prabakaran PMJF*

2009-ஆம் ஆண்டு, லயன் D.பிரபாகரன் PMJF மற்றும் அவரது மனைவி லயன் ராதிகா தேவி MJF நமது சங்கத்தில் லயன் Er.நாகராஜன் அவர்கள் அழைப்பினை ஏற்று இணைந்தார்கள். 2016-17 ஆம் ஆண்டு நமது லயன்ஸ் இயக்கத்தின் நூறாவது ஆண்டில் (Centennial Year) லயன் Er.நாகராஜன் அவர்களின் தலைமையில் செயலாளராகப் பணியாற்றி சிறந்த செயலாளருக்கான விருதையும், 2020-21 ஆம் ஆண்டு தலைவராக இருந்த போது பன்னாட்டு அளவில் சிறந்த தலைவருக்கான விருதினையும், 2022-23 ஆம் ஆண்டு வட்டார தலைவராக இருந்த போது Best Zone Chairperson award மற்றும் Zone chairperson International Excellence award பெற்றார்.

**2020-21 ஆம் ஆண்டு தலைவராக இருந்த போது உங்கள் செயல்பாடு :**

2020-21 ஆம் ஆண்டு கொரோனா காலக்கட்டத்தில் நமது பாரம்பரியமிக்க சங்கத்தின் வைர விழா ஆண்டின் (60-ம் ஆண்டு) தலைவராகப் பணியாற்ற எனக்கு வாய்ப்பளித்த நமது

PDG லயன் A.வைரப்பிரகாசம் MJF - லயன் மீரா வைரப்பிரகாசம் MJF அவர்களுக்கும் முன்னாள் தலைவர்கள், உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வைர விழா ஆண்டினை நினைவு கூறும் விதமாக நமது சங்கத்திற்கான தனி லோகோ (logo) சங்கத்திற்கான தனி லோகோ பொத்தான் (PIN) வெளியிடப்பட்டது. COVID-19 பரவி வந்த நேரம்... Lockdown என்று உலகமே கண்டிராத ஒரு புதுமையான காலக்கட்டத்தில், எப்படி சங்க கூட்டங்களை நடத்துவது... சேவை செய்வது... யார் நிதி வழங்குவார்கள் என்று குழப்பமான ஆழ்நிலை நிறுவிய போது... WHERE THERE IS A NEED THERE IS A LION... என்ற வாசகத்திற்கு ஏற்றார் போல் நமது சங்க உறுப்பினர்கள்... சிங்கங்கள்... அனைவரும் போட்டி போட்டு சேவைகளை செய்தார்கள்.

ஆண்டின் முடிவில் மூன்று லட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூபாய் 4.5 கோடி அளவிலான 811 சேவைகள் செய்து மாவட்ட அளவில் துவக்கம் முதல் இறுதி வரை பல்வேறு விருதுகளை நமது சங்கம் பெற்றது.

மாவட்ட அளவில், கூட்டு மாவட்ட அளவில் மற்றும் பன்னாட்டு அளவில் சிறந்த தலைவருக்கான விருதினை பெற்றதில் பெருமிதம் கொள்கின்றேன். Success Story Contest போட்டியில் பங்கு பெற்று நமது சங்கம் சிவகாசி அரசு பொது மருத்துவமனைக்கு கொரோனா காலக்கட்டத்தில் செய்த சேவைகளை டாக்குமெண்ட்ரி படம் எடுத்து வெளியிட்டு, கூட்டு மாவட்ட அளவில் முதலிடம் பெற்று ISAME அளவில் Online மூலம் கலந்து கொண்டது மறக்க முடியாத அனுபவம்.

**2020-21-ம் ஆண்டில் உங்களது சேவைத் திட்டங்கள் :**

துவக்கத்தில் Online மூலம் Zoom மீட்டிங் நடத்தினோம். சிவகாசி நகராட்சியுடன் இணைந்து தொடர்ச்சியாக 30 நாட்கள் மருத்துவ முகாம் நடத்தினோம். வைரம் அண்ணாச்சி, மீரா அக்கா அவர்களின் 60–ஆம் ஆண்டு திருமணநாள் விழா கொண்டாடினோம். செப்டம்பர் மாதம் முழுவதும் அதிகாலையில்

சாலையோரம் Nutrition awarness Camp, CSI பள்ளிக்கு dining hall, Lions Quest Program, world Lions Service day அன்று ஒரே நாளில் 60 சேவைகள், நவம்பர் மாதம் முழுவதும் உடல் ஆரோக்கியம் சம்மந்தப்பட்ட Webinar ஜனவரி மாதம் முழுவதும் சிவகாசி அரசு பொது மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு woollen dress, அரசு பள்ளி குழந்தைகளுக்கு Dronepreneur அறிவியல் பயிலரங்கம், அரசு மருத்துவமனைக்கு பல்வேறு மருத்துவ உபகரணங்கள் Oxygen Concentrator, oxygen storage tank, Power laundry, வழங்கி கொரோனா காலக்கட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிர்களை காத்திட்டது,

பெண்கள் தினத்தை கொண்டாடும். விதத்தில் சிங்கப்பெண்ணே விருது வழங்கும் நிகழ்ச்சி, சிபியோ பள்ளிக்கு குளியலறை மற்றும் கழிப்பறை 20 அரசு பள்ளிகளுக்கு கணிப்பொறி, பல்வேறு மருத்துவமுகாம் என வருடம் முழுவதும் சேவைகள் செய்திட எனக்கு உதவியாக இருந்த எனது செயலாளர் லயன் செல்வராஜ் MJF, பொருளாளர் லயன் சிவசக்தி பாலன், இணை செயலாளர் லயன் சுரேஷ் சந்தர், இணைப் பொருளாளர் லயன் செந்தில் குமார், Club admin லயன் Er.நாகராஜன், service Committee Chairperson லயன் A.M.S.G.அசோகன் PMJF, Bulletin Editor லயன் ஜெயா நாகராஜன் மற்றும் சேவை செய்திட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**2022-23 வட்டாரத் தலைவராக நீங்கள் பெற்ற விருதுகள் :**

2022-23ஆம் ஆண்டின் மாவட்ட ஆளுநர் Passion லயன் Dr.விஸ்வநாதன் PMJF அவர்களால் வட்டாரத் தலைவராக நியமனம் செய்யப்பட்டு செயலாற்றி, District directory-க்கு 5 லட்சத்திற்கும் அதிகமாக விளம்பரம் வாங்கிக் கொடுத்ததற்காக மாவட்ட அமைச்சரவை சார்பாக PMJF வழங்கப்பட்டது.

புதியதாக Lions club of Sivakasl Passion மற்றும் Leo club of Sivakasi Passión துவங்கியது, எனது வட்டாரத்தில் உள்ள – சங்கங்கள் மூலமாக 14 MJF பெற்றுத் தந்தது என வருடம் முழுவதும். ஆளுநருக்கு பக்க பலமாக இருந்து நமது 324-A மாவட்டத்தை உலகறிய செய்தது குறிப்பிடத்தக்கது.

ஐந்து சங்கங்களுக்கு Club Excellence award பெற்றது, மாவட்ட அளவில் மற்றும் கூட்டு மாவட்ட அளவில் No.1 Best Zone Chairperson award மற்றும். Zone chairperson International Excellence award பெற்றது. சிறப்பு வாய்ந்ததாக அமைந்தது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற ISAME FORUM நிகழ்ச்சியில் பன்னாட்டு தலைவர் லயன் Brian sheehan அவர்களிடமிருந்து நமது மாவட்டத்திற்கான Membership Growth Award Achiever பெற்றது சிறப்புமிக்க மறக்க முடியாத தருணம். PST Schooling, 3 Zone Advisory Committee and Inter club Meeting மற்றும் Zone Social and Zone Awards நிகழ்ச்சிகள் அனைத்தும் மிகச்சிறப்பாக நடத்தப்பட்டது. மாவட்ட அமைச்சரவைக் கூட்டம் சிவகாசியில் நடைபெற்ற போது, பொருப்பாளராக இருந்து மிகச் சிறப்பாக நடத்தியதற்காக மாவட்ட ஆளுநரால் பாராட்டு பெற்றது, மண்டலத் தலைவர் லயன் லட்சுமணன் MJF அவர்களோடு‘ இணைந்து Regional Meeting நடத்தியது மற்றும் Cabinet Installation, மாவட்ட மாநாடு, Multiple Convention, Cabinet meeting, District foreign tour ... என சென்ற ஆண்டு முழுவதும் இனிய லயன்ஸ் பயணமாக அமைந்தது.

**தற்போது உங்கள் பதவி :**

2023-24 ஆண்டின் ஆளுநர் லயன் Dr.D.பிரான்ஸிஸ் ரவி MJF அவர்கள் Dc for district Chairperson பொறுப்பினை வழங்கினார். District Chairperson Orientation நிகழ்ச்சியை சிவகாசியில் மிகச்சிறப்பாக நடத்தி அனைவரது பாராட்டைப் பெற்றேன்.

பல்வேறு பொறுப்புகளில் அங்கம் வகித்திருந்தாலும் நமது சிவகாசி லயன்ஸ் சங்கத்தின் உறுப்பினர் என்பதில் பெருமிதம் கொள்கின்றேன். லயன்ஸ் பணிகளில் ஈடுபடும் போது எனக்கு

உறுதுணையாக இருக்கும் எனது குடும்பத்தினருக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இவரது லயன்ஸ் சேவை தொடர வாழ்த்துவோம்...**













# COVER STORY

## The Sivakasi Lions International Institutions

### நமது அடுத்த சகாப்தம்

*Lion K.Prabakar,* Correspondent 2015-19



அனைவருக்கும் வணக்கங்கள்.

நாம் புதியதாக துவங்க இருக்கும் நமது இன்டர்நேஷனல் பள்ளியை பற்றி எழுத எனக்கு ஒரு வாய்ப்பு கொடுத்தற்கு நமது சங்க இதழாசிரியர் லயன் தீபலட்சுமி சுதாகரன் அவர்களுக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

1968ல் சிவகாசி நகரில் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட ஆங்கில பள்ளி நமது சிவகாசி லயன்ஸ் மெட்ரிகுலேஷன் மேல் நிலைப் பள்ளி என்பது அனைவருக்கும் தெரியும். இன்று அது ஆலமரம் போல படர்ந்து இந்த சமுதாயத்திற்கு நல்ல குடிமக்களை வழங்கி மிக பெரிய சேவையை செய்து கொண்டிருக்கிறது.

இன்று எங்கு பார்த்தாலும் இன்டர்நேஷனல் பள்ளி என்று பெயரிடப்பட்டுள்ள பள்ளிகளை பார்க்கிறோம். அது எல்லாம் உண்மையான இன்டர்நேஷனல் கல்வியை வழங்கிக் கொண்டு இருக்கிறதா என்று பார்த்தால் கண்டிப்பாக இல்லை என்றே சொல்ல வேண்டும்.

“Globalization” என்று ஆங்கிலத்தில் ஒரு வார்த்தை சொல்வார்கள், அதாவது “உலகமயமாதல்”. வாய்ப்புக்களும், போட்டிகளும் இந்த உலகத்தில் எந்த மூலையில் இருந்து வேண்டுமானாலும் நமக்கு வரலாம். அதை சரியானபடி பயன்படுத்துவதற்கும், சமாளிப்பதற்கும் நம்மை தயார் செய்து கொள்ள வேண்டும். இன்று பொருளாதாரத்தில் உலகத்திலேயே வேகமாக வளரும் நாடாக இந்தியா உள்ளது. இன்றைய மாணவ, மாணவியர்கள் தான் நாளை இந்த உலகத்தை ஆளப் போகிறார்கள். அவர்களை உலகத்தரம் வாய்ந்தவர்களாக

மாற்றும் பொறுப்பு நமது கையில்தான் உள்ளது. அந்த சேவையைதான் நமது Lion Club of Sivakasi தற்சமயம் எடுத்து உள்ளது. உண்மையான உலகத்தரம் வாய்ந்த கல்வியை கொடுக்க வேண்டும். அப்படிப்பட்ட உயரிய சேவை எண்ணத்துடன் ஆரம்பிக்கப்பட்டதுதான் நமது புதிய சேவைத் திட்டம்

**"The Sivakasi Lions International Institutions"**

23.04.2023 அன்று பூமி பூஜையுடன் இந்த சேவைத் திட்டத்தை துவங்கி உள்ளோம்.

உலகத்தரம் வாய்ந்த கல்வியை கொடுக்க வேண்டுமெனில், உலகத்தரம் வாய்ந்தவர்களுடன் நாம் இணைய வேண்டும். EROCON என்ற Delhiயில் உள்ள consultation நிறுவனத்துடன் இணைந்து இந்த புராஜெக்டை ஆரம்பித்து உள்ளோம். அவர்கள் M.S. Dhoni Global School, Delhi Public School, Birla School போன்ற பல இந்தியாவின் முதன்மையான பள்ளிகளுக்கு consultation செய்பவர்கள். இவர்களது பணி இன்டர்நேஷனல் பள்ளி ஆரம்பிப்பதற்காக கட்டிட வரைபடத்தில் ஆரம்பித்து, Interior designing, approvals, affiliations, principal, teachers மற்றும் staffs recruitment, training, curriculum framing, ERP for school administration, digital marketing என்று ஒரு பள்ளி சம்பந்தப்பட்ட அனைத்து வேலைகளையும் நம்முடன் இணைந்து முடித்துக் கொடுப்பவர்கள். அவர்களது தாரக மந்திரமே "The Best". அது போலதான் மிகவும் மாடர்ன் ஆக கட்டிடத்தை உருவாக்க ஆரம்பித்து இன்று முடியும் நிலைக்கு வந்து உள்ளது.

பாடத்திட்டத்தை பொறுத்தவரை 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை IB என்று சொல்லப்படும் "International Baccalaureate" PYP (Primary Years Program) திட்டத்தின் கீழ் இருக்கும். IB program ஆனது 1960களில் International School of Genevaவில் ஆரம்பிக்கப்பட்டது. உலகம் முழுவதும் 5000 பள்ளிகள் உள்ளன. இந்தியாவில் 200 பள்ளிகள் உள்ளன. இந்தப் பாடத்திட்டத்தின் சிறப்பு அம்சம், முழுவதும் activity based

ஆக இருக்கும். இது மாணவ மாணவியர்களின் சிந்தனைகளை தூண்டி, அவர்களை சொந்தமாக சிந்திக்க வைத்து உலகத்தரம் வாய்ந்தவர்களாக மாற்றுவது. இந்தப் பாடத்திட்டத்திற்காக நாம் Nature and Nurture என்ற நிறுவனத்துடன் இணைத்துள்ளோம். மற்றும் 6 முதல் CBSC boardல் அங்கீகாரம் வாங்கப்பட்டுள்ளது. இந்த வருடம் 6 மற்றும் 7ம் வகுப்புகள் ஆரம்பிக்கப்போகிறோம். வரப் போகும் காலங்களில் அடுத்தடுத்த வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

Principal நியமிக்கப்பட்டு உள்ளார்கள். அவர்களது பெயர் Mrs. லதா ரவிச்சந்திரன், சென்னையை சேர்ந்தவராக இருந்தாலும் பெங்களூரில் ஒரு இன்டர்நேஷனல் பள்ளியில் Principal-ஆக வேலை செய்து தற்சமயம் நமது பள்ளியில் இணைந்துள்ளார்கள். அவர்கள் முதுகலை பட்டம் லண்டனில் இருக்கும் பிரபல Middlesex Universityல் படித்தவர்கள். மேலும் அமெரிக்கா மற்றும் மாலத்தீவுகளில் வேலை பார்த்தவர்கள். இன்டர்நேஷனல் பள்ளியில் 10 வருடம் Principalஆக இருந்த அனுபவம் உள்ளவர்கள்.

மேலும் IBக்குரிய teacherகளை விஜயவாடா, பெங்களூர், ஏற்காடு, கொடைக்கானல் போன்ற நகரங்களில் இன்டர்நேஷனல் பள்ளியில் வேலை பார்த்து அனுபவம் உள்ளவர்களை நியமித்துள்ளோம். அவர்கள் அனைவரையும் IBக்கான training-க்கு அனுப்ப ஏற்பாடு செய்து கொண்டு இருக்கிறோம். Administrative staffகளை நியமித்துள்ளோம்.

மேலும் அட்மிஷனில் இருந்து ஆரம்பித்து, பாடத்திட்டங்கள், மதிப்பிடுதல், நிர்வாகம் அனைத்துமே ERP (Enterprise Resource Planning) என்று சொல்லப்படும் Software மூலமாக இயக்கப்படும். இதற்காக School Tech Solutions என்ற Noidaவில் உள்ள நிறுவனத்துடன் இணைந்துள்ளோம். இன்றைய டிஜிட்டல் உலகத்தில் Digital marketing ஒரு நிறுவனத்தை பிரபலப்படுத்த மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆகிக் கொண்டிருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். இதற்காக Candid School என்ற Bangaloreல் இருக்கும்

நிறுவனத்துடன் இணைந்துள்ளோம். மேலும் Sports, Arts, Music என்று மற்ற extra curricular activities-க்கும் தலை சிறந்த நிறுவனங்களுடன் கை கோர்க்கப் போகிறோம்.

முதல் கட்டமாக ஒரு பிளாக் கட்டிக் கொண்டிருக்கிறோம். தரைத்தளம் மற்றும் இரண்டு மாடிகள் கொண்டது. இதில் admistrative area போக academic-க்காக 14 வகுப்பறைகள் Library, Physics, Chemistry, Biology, Computer, EVS, Maths Lab, Activity room, Arts & Crafts room மற்றும் Amphitheatre வசதிகள் உள்ளன. லிப்ட் வசதி செய்யப்பட்டுள்ளது.

விளையாட்டிற்காக 200 meter track, foot ball, volley ball, basket ball, tennis court, archery, skating வசதிகள் செய்யப்படவுள்ளது. மற்றும் Children's play area-வும் உள்ளது. Transport வசதிகள் செய்யப்படவுள்ளது. எதிர்காலத்தில் பள்ளியை விரிவாக்க இந்த பிளாக் அருகிலேயே மற்றொரு பிளாக் கட்ட இடம் உள்ளது.

இந்த பள்ளி உண்மையான இன்டர்நேஷனல் பள்ளியாக இருக்க வேண்டும் என்று ஒவ்வொரு விஷயத்திலும் உலகத்தரம் வாய்ந்தவர்களுடன் இணைந்து உருவாக்கப்படுகிறது. கண்டிப்பாக எதிர்காலத்தில் மிகவும் தலைசிறந்த இன்டர்நேஷனல் பள்ளியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தற்சமயம் அட்மிஷன் ஆரம்பித்து விட்டோம். மக்களின் வசதிக்காக 32, காரனேஷன் காலனியில் (கார்ப்பரேஷன் பார்க் எதிர்புறம்) அட்மிஷன் ஆபிஸ் திறந்துள்ளோம்.

இந்தத் தருணத்தில் நமது பள்ளித்தாளாளராக இருக்கும் Lion J.ரமேஷ் குமார் அவர்களுக்கு நாம் நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவிக்க வேண்டும். 2005ம் ஆண்டு அவர் தாளாளராக இருக்கும் போது எடுத்த முயற்சியால் தான் இன்று மிகப்பெரிய சீனியர் வளாகம் உருவாகியுள்ளது. தற்சமயம் இந்த இன்டர்நேஷனல் புராஜெக்ட்டை எடுத்துள்ளார். அதை வெற்றிக்கரமாக முடிக்க நமது சங்கத்தின் சார்பாக வாழ்த்துவோமாக. மேலும் அவருக்கு உறுதுணையாக உள்ள

நமது பள்ளி கமிட்டி உறுப்பினர்களுக்கும், நமது சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்டர்நேஷனல் பள்ளிக்காக நமது சங்க உறுப்பினர்களிடம் நன்கொடை வாங்கிக் கொண்டிருக்கிறோம். குறிப்பிட்ட தொகை கொடுத்தால் வகுப்பறைகளுக்கு அவர்கள் பெயர் வைக்கிறோம். தாங்கள் அனைவரும் நன்கொடை கொடுத்து இந்த புராஜெக்ட்டை வெற்றிக்கரமாக முடிக்க உதவும் படி கேட்டுக் கொள்கிறோம். நன்றி வணக்கம்!








***"From blueprint to reality : A Look at Our New School Model and Construction Progress"***

# New Office Room










EROCON Director Mr Shiraz Kirmani

Principal Mrs Latha Ravichandran






# International Institutions Introduction Meeting





# Unveiling Lions School Activities

### 16th February 2024 to 15th March 2024

**Academics :**

In the Unified National Mathematics Olympiad 2023 - 2024. Our student won many National Rank. The students of Std I to V who excelled in Mindspark Activities were taken part in Mindgym Competitions, conducted by Ms Zohra, Educational Initiatives, Madurai in the junior school IT Lab

**Sports Achievements**

Our Students Got IInd Place in State Level Archery Tournament. Ist Place in State level Yoga Championship 3rd place in State level Boxing tournament. Got Prizes in all the category in District level Badminton tournament. Many prizes in the District level Skating championship. III place in District Level Chess Tournament

Ist place In the State level open Badminton tournament. IInd Place in District Level Archery Club Meet. Virudhunagar District Level chess championship. III place in TamilNadu South Zona Level Taskwondo Tournament. III place in District Level Chess Tournament. Chess championship qualified as semifinalist In the State level Tennis tournament

**Functions**

Library Week Celebration was held in the junior school on Friday, 23rd February 2024. Pink Day was celebrated in the Playschool and the Junior School & senior Campus. A grand farewell was organised for class XII students on 26.02.2024 Correspondent Lion J Rameshkumar distributed the Hall tickets to the students. The teachers blessed the students. 82 lamps were distributed for the outgoing graduates of Class XII.

The Sivakasi Lions Playschool Graduation Day was celebrated very grandly in the junior school on Saturday, 2nd March 2024. Headmistress Mrs B Mercy welcomed the

gathering. Play school tiny tots dressed up with nice attires, performed different cultural activities. Chief Guest Lion J Ramesh Kumar, Correspondent distributed the certificates of Graduation to the kids and felicitated the students.

The Sivakasi Lions Play school Sports Day was celebrated very grandly in the junior school. Pre KG kids held the Olympic Torch and it was lit by Chief Guest Lion J Ramesh Kumar, Correspondent. He declared The Sivakasi Lions playschool Sports Meet Open and flew away the pigeons. The Playschool kids released the helium balloons up in the air.

**Others**

A Medical camp was organised by Lions Club of Sivakasi at our Senior campus. On account of National Deworming Day, Albendazole Tablet was distributed to the students.

The Learning Links Foundations & Shell has jointly organized the "NXplorers Junior" workshop for Std VI students through ATAL Tinkering lab. Students were asked to do the various activities including windmill, preparing the problem statements on SDG, presenting the solutions. Career Guidance programme was organised for Std IX students.

53 students of Std III to V were taken part in the Karate Grading Test in the junior school Headmistress B Mercy distributed the light green and white belts to them.

The Sivakasi Lions International Institutions IB PYP & CBSE Introduction Meeting with the parents of SKG to Std V was held in the junior school on Friday 8th March & Alumini get together meeting was held on 9th March. President Lion K.Prabakar delivered the welcome address; Correspondent Lion J Ramesh Kumar gave an introduction about New School; EROCON Director Mr Shiraz Kirmani demonstrated why IB and about IB Curriculum and clarifying the queries of the parents. Principal Mrs Latha Ravichandran explained about the execution of curriculum and other activities; Headmistress Mrs B Mercy delivered the vote of thanks.

Anti Drug Club was inaugurated in our Senior campus and conducted drug awareness club meeting. Teachers gave a speech on the disadvantages of drug abuse and usage of drugs. The students' took the pledge during the launch of Drive Against Drugs (DAD). 78 students of SKG and 73 students of JKG along with their teachers and helpers respectively had their funtime in LPL Park, Kovilpatti.







# *A Birthday Blessing*



Happy Birthday!

Dear Lions,

You are one of those special people who
Make the world a nicer place to be.
And life would not be the same if you were
Not a very special part of it.
If your birthday happiness equals the
happiness you give away.
Your day will be all you could wish for and more…

**The members who are celebrating their Birthdays during the month of March are:**



Lion Dr.A.Thanga Thirupathi
20.03.1968



Lion C.Chiranjeevi Raj
20.03.1976



Lion Hemalatha Shankar
20.03.1974



Lion Soundaryaa Giritharan
21.03.1996



Lion C.Mathan
23.03.1977



Lion M.Murali Krishnan
23.03.1979



Lion A.S.Rajah
25.03.1952



Lion S.Radhakrishnan
29.03.1961





Lion S.V.Paulraj
29.03.1968



Lion G.Sivasakthi Balan
29.03.1974



## *Wedding Anniversary Wishes...*



"Best couple always feels…
Things become much easier with you
As you give me the entire clue
You have helped me a lot with things
All the knowledge of gadgets and blings
Actually you are like my life line
You have supported me all through
Whenever in old or in the new
I just simply want to say that
I'm incredibly fortunate to have you as my partner!"
Happy Wedding Anniversary!

**The members who are celebrating their Wedding Anniversaries during the month of March are:**

1. லயன் A.K.K.பாஸ்கரன் – விசாலாக்ஷி 14.03.1984
2. லயன் K.பரமானந்தம் – சுபத்ரா 27.03.1983
3. லயன் Dr.S.ரமேஷ் – மல்லிகா 27.03.1988

இவர்கள் நூறாண்டு காலம் இணையுடன் வாழ்க என வாழ்த்துகிறோம்.

**Birthday Puzzle**

1. Number of years since birth
2. A sequence of steps and movements to music
3. A present
4. A gathering of people for fun or celebration
5. A sweet treat usually frosted with icing
6. Thrown in the air at a party or other event

*Lion Deepa Arunkumar*
*Greeter Committee Chairperson 2023-24*



**Answer :** 1.Age 2.Dance 3.Gift
4.Party 5.Cake 6.Balloons